21.01.2026 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண்.114 /2016 ) திரு.வல்லத்தரசு.

1,2,5,6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

1) எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் கருப்பசாமியிடமிருந்து. எந்த வருடம் என்றால் 1906 ஆம்ஆண்டு. 1906 ஆம்ஆண்டு ஆவணத்தை பாத்தால் பாதை இருப்பது துலங்கும் என்றால் சரிதான். 1906 ஆம்ஆண்டு ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியும் என்றால் முடியும். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போதோ வழக்கு விசாரணையின் போதோ 1906 ஆம்ஆண்டு ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட சொத்து கோமதியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1,2,5,6 பிரதிவாதிகள் கோமதியம்மாளின் வகையறாக்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டஇடம் கிழமேல் 30 தென்வடல் 21 தச்சுமுளம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் பிரதிவாதிகள் புழங்குவதில் எனக்குஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனையில்லை. எங்கள் வீட்டிற்கும் ரயிவே தண்டவாளத்திற்கும் இடையே எவ்வளவு துூரம்இருக்கும் என்றால் தோராயமாக 15 மீட்டர் இருக்கும். 15 மீட்டர் இடம் எந்தவழியாக செல்லும் என்றால் அது இரயில்வே இடம். ரயில்வே இடம் என்று சொல்லுவது உண்மையல்ல அது நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட இடம் என்றால் சரியல்ல. எனது ஆவணத்தில் தென்வடல் பொது தெரு என்று இல்லை என்றால் பாதை உள்ளது. பொது பாதை கிடையாது என்றும் அது பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட பாதை என்றால் சரியல்ல. பிராதில் 1 ம்தபசிலாக காட்டப்பட்டுள்ள இடம் பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட கையிருப்பு இடம் என்றால் இல்லை பழக்கத்தில் உள்ளது.அந்த பாதை தற்சமயமாகத்தான் புழங்கிவந்தோம் அதை பிரதிவாதிகள் சகித்து வந்தார்கள் என்றால் சரியல்ல 50 வருடங்களாக புழங்கிவருகிறோம். அதை ஆஸ்பதமாக கொண்டு பாதையை உரிமை கொண்டாடி வருகிறோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு பாதை வடக்குமுகமாக சென்று நகராட்சி பாதைவழியாகத்தான் நாங்கள் செல்லமுடியும் என்றால் நாங்கள் அந்த வழியாக சென்றது இல்லை பாதை கிடையாது. பிரதிவாதிகள் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) 3 ம்பிரதிவாதி வீட்டிற்கு தெற்கே உலகம்மாள் பாத்தியப்பட்ட காலியிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த காலியிடத்தின் ஒரு பகுதியில் மாட்டுக்கொட்டகை

போடப்பட்டுள்ளது என்றால் கிழக்கு பக்கம் போடப்பட்டுள்ளது. பிரதிவாதிகளின் ஆவணங்களில் பிராது 1ம்தபசில் சொத்தை பாதையாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அது சர்க்கார் புறம்போக்கு என்றுசொல்லுவது தவறு என்றால் சரியல்ல. 1ம்தபசில் சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.பிரதிவாதிகள் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் தான் மாட்டுத்தொழுவம் கட்டியுள்ளார்கள் என்றும் 1ம்தபசில் சொத்தில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்அதிக ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எங்கள் வீட்டை ஒட்டி எங்கள் உறவினர்கள் எத்தனைபேர்கள் உள்ளார்கள் என்றால் 4பேர்கள். அவர்கள் இந்த வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான்.அவர்களுக்காகவும் இந்த வழக்கை வாதியாக இருந்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் இந்த வழக்கு அவசியக்கட்சிக்காரர்களைசேர்க்காத தோஷத்திற்கு உட்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யாதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது*

*(ஒப்பம்)C.கருப்பசாமி,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*21.01.2026.*